தமிழ் வாழ்க!

# தமிழ் மணிக்கீதம்



செந்தமிழ்க் கவிஞர் சங்கம்

ஆசிரியர் -

## கா. சி. ரெங்கநாதன்

முதற் பதிப்பு — 7-3-63 — சதம்: 35

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாற்றுக்கவி.

## ஆசிரிய விருத்தம்.

மூத்தமிழ்ச்சங்கம் முழங்கும் கூடல்நகர்
மூர்த்தி சொக்கலிங்க மதின் எழிலைப்பாடி
முழங்குதமிழ்ச் சின்னையா கவிஞன் செய்த
முன்னுளின் தவப்பயனல் உதித்தசேயன்
சித்தியருள்கின்றசிவ ஆகமத்தின்
சிறப்புரைக்கும் திருமுறைப்பா சுரங்களோடு
சித்தர்தவ ஞான நூல் பலவுங்கற்ற
சிறந்ததமிட் கவிஞனெனப் புலவர்கூற
அத்துவித மெய்ப்பொருள்ாம் கதிரைக்கந்தன்
அறுமுகவன் மீதனேக துதிகள்பாடி
அக், கெழுத்து, சொல் பொருள், ஆப், பணியென்றிங்கு
அறைந்திடும் ஐந்திலக்கணங்கள் வழுவாதின்று
சித்திரக்கவிதா எழுதித் தொழிலாளர் செய்
சிரில்லா வழக்கமதைத் திருத்தும் வீர
சிங்கமெனும் கா. சி. ரெங்கநாதன் கீதம்
சிறந்த தமிட் கமுதமெண செப்புவோமே.

---

## கட்டளைக் கலித்துறை.

செய்யபுகழேந்தி கூத்தனுர் கம்பன் சிவந்தகிரி
துய்யபடிக்காசு இரட்டையரோவெனத் தோன்றியுளான்
மெய்த்தமிழ் தொண்டன் ஸ்ரீ ரெங்கநாதன் விரித்ததமிழ்
வையகமீது தமிழ்த்தாய்க்குச் சூட்டும் மணிமகுடம்.

இங்ஙனம்,

எஸ். ஆர். எஸ். பெரியாம்பிள்ளை
மலைநாட்டு செந்தமிழ் கவிஞர் சங்கம்
நாவலப்பிட்டிய — தலைவர்.

காரியதரிசி: எம். வி. சீனிவாசன், கம்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருவே செறிந்த திருப்புகழ் சந்தம்.

மதியார் மதிக்க மனுநீதிக் கொப்ப
வழுவாத ஆட்சி புரிவோனும்
மணிமாத வன்றன் னருளாலுதித்த
மறைஞான மோதும் பெரியோனும்
கதியேதுமற்ற தொழிலாளர்கு்ற்ற
குறைபாடு வற்கும் நிதியோனும்
கலைஞானம் கற்ற தமிழ்வாணர் தமமை
கனிவோடு மெச்சி மகிழ்வோனும்
எதிராளிகட்கும் இதமாயுரைத்து
அவர் சூடும் மாலை அணிவோனும்
எழில்போக வாழ்வும் சிறிதாய் மதித்துப்
பொதுவாழ்விற் சிந்தை யுடையோனும்
மதி முஸ்லீம் பௌத மெனும் கிருஸ்தவர்கள்
தனிலுற்ற மோக முடையோனும்
மகமேருக் கொப்பும் தவசீர்பா தத்தின்
மலைவாசல் கண்டு தொழுவோனும்
நதிபாயுமிலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
கதிமேதையாக உறைவோனும்
நாம் கண்ட தொண்ட மான்என்றும் வாழ
யாம் தொண்டு செய்தல் நலமாமே.

## மதிப்புரை.

ஆண்டவன் புகழைப் பாடுவதும், பாராயணஞ் செய்வதும் பவப்பிணியகற்றும் நம் சமய குரவர்களது வழி நின்று தொண்டாற்றுபவர், ஆவரங்கால் சிவஸ்ரீ சோ. செல்லையாக்குருக்களவர்கள் இயற்றிய "சங்கீதாமிர்தம்" ஒரு வழிபாட்டு நூலாகத் தமிழகந்தோறும் இருக்கவேண்டியது, அன்றாது தமிழ்ப்பணி, இறை பணி, சைவப் பணி ஆதியனவற்றைப் பாராட்டவேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும். தமிழ் மக்கள் இவ்வரிய நூலுக்குப் போதிய ஆதரவு கொடுப்பார்களாக.

முத்தமிழ் மணி, வண்ணைச்சிவத்திரு,
C. S. S. மணி பாகவதர்
யாழ்ப்பாணம்

கிடைக்குமிடம்:
சங்கீத கலாமன்றம்,
மலபார் ரோட், கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற பாரத இரத்தினமும்,
முன்னாள் இந்திய ஜனாதிபதியும், ராஷ்டிரபதியுமான

# டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அவர்கள் மீது.

## புதுவர்ண இசை - ஏகதாளம்

அண்ணலே நீரும் மடிந்தீரோ இந்த மண்ணிலே (அ

அறிஞர் உலகம் பெரிதும் விரும்பும்
அகில பாரத ரத்தின மென்னும் (அ

எண்ணிலாத சீனர்படை இந்தியா புகுந்தது
இமயந்தன்னில் கொடியை நாட்ட இருந்ததும் நீர் அறிந்தது
என்னவெல்லாமோ உரைத்தும் இன்னமுந்தான் எதிர்க்குது
இந்தநேரமா உமது ஆவியும் பிரிந்தது (அ

மண்டலம் அறிந்த மாக்மோஹன் வகுத்த எல்லையே
மறுத்து சீனர் கொடுக்கிறார் மகாகொடிய தொல்லையே
என்றிருந்தும் ஏற்கும் நமது இந்தியாவின் சொல்லையே
என்றிட்டாலும் நீங்கள் இந்த நேரமிங்கு இல்லையே (அ

மன்னராட்சி மறைந்து எங்கும் மக்களாட்சி மலரணும்
மகாத்மாகாந்தி ஜீயின் கொள்கை உலக முழுதும் பரவணும்
என்னும் எண்ணம தன்னில்சீனர் மண்ணைவாரி இறைக்கணும்
என்றிருக்கும் போதா நீங்கள் அமரர் உலகம் போகணும்


## புதுவருட சிக்கன செக்ரேலை பற்றி
### தொழிலாள தோழர்களுக்கு ஓர் அறிவித்தல்.

நீங்கள் வேலை செய்யும் நாள்களை தினசரி பதிவு செய்து வைத்து மாதாந்தர சம்பளத்தை தோட்ட செக்ரேல் உதவியின்றி தெரிந்து கொள்வதில் கடந்த மூன்றுண்டுகளாக சிக்கன செக்ரேல் உங்களுக்கு பணியாற்றி வந்திருப்பதைப் பாராட்டி, அன்பர்களாகிய நீங்கள் எனக்கு எழுதிய கடிதங்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள், அவசியமான சில சட்டக்குறிப்புகளை அறிந்துகொள்ளவும் சிக்கன செக்ரேல் வழிகாட்டுகிறது. இதுமட்டுமா! சேமலாப நிதி, சேமிப்பை அறிந்துகொள்ள உங்கள் சம்பளக் கணக்கு அவசியம். போனஸ் பிரஸ்தாப சகாயநிதி எல்லாம் அறியலாம்.

தனிப்பிரதி விலை சதம் -50
100க்கு விலை ரூபாய் 40-00

வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும்.

பிரசுரிப்பவர்,
எம். எஸ். மாரிமுத்து

எண். 8, நுவரெலியா ரோட்,
கம்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய இரங்கற்பா.

தோட்டத் தொழிலாளர் தலைவர்களில் ஒரு தலைவர்
தேடவும் கிடைக்காத தங்கம் நிகர் தலைவர்
நாட்டமுடன் தொழிலாளர் நலம்தன்னையே கருதி
நன்மைபல செய்திட்ட நமது துணைத்தலைவர்
வாட்டமேன் வருகவென வானுலகழைத்ததோ
வரையமிர்தம் உயிர்நீங்கி வானொலியின் மூலம்
கேட்டதிர்ச்சியுற்றெழுந் தேனங்கோ! வென்றேன்
கிறுக்கனைப்போலவே மதியது புரண்டேன்
ஓட்டமுடன் வேனில்சென் றுயர்சங்கு வாரியின்
உட்புகுந்து வெளிவரவே இடமங்கு இல்லை
கூட்டம் கடல்போலெங்கும் கவலை தோய்ந்தங் கங்கும்
கண்டுபின் சென்று நற் குலகர்ம வீரர்
வீட்டதிலே பூதவுடலைச்சுற்றி வந்தேன்
வணக்கம் செய்தேனவர்ச மாதியடைந்தபின்
தேட்டமுடன் அவர் ஞாபகச் சின்னமாக யான்
தொடுத்தகவி தைச்சுவையை பகிர்ந்துருசிப்பீரே

---

## பாலும் பழமும் - இசை

காலம் முழுதும் கதர்க்கொடி தாங்கி
கடமை செய்த மகாபிர சங்கி
வாழ வேண்டியவர் இன்னும் ஓங்கி
மாளலாமோ நம்மை வீட்டு நீங்கி [கா

உண்மை உழைப்பால் உயர்ந் தவராகி
உலகத் தொழிலாளர் சபைஏகி
நன்மை பல செய்த திருவாகி
இராஜலிங்க மேயொரு தியாகி [கா

மேடைப் பேச்சில் விறுவிறுப் பூட்டும்
மேருமலைபோல் உயர்குணம் காட்டும்
கோடை இடிபோல் இடித்துணர் வூட்டும்
கருத்தின் செறிவே தனிக்கலை மூட்டும் [கா

அஞ்சும் மனமோ ஆத்திரக் குணமோ
கின்சிற்றேனும் காணுதற் காமோ
மஞ்ச வாழ்வோ மனைபொருள் சுகமோ
மறந்தும் நினையா தவர்க்கிணை யாமோ [கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பட வேண்டின் இடர்பட வேண்டும்
பணியதைச் செய்தால் நடுநிலை வேண்டும்
தகவிதுபோல் செய்தவர் இவர் மீண்டும்
சமூகந் தந்திடுவாரோ நம்முன் ஈண்டும் [கா

(ஆலயமணியில்)

சட்டி சுட்டதடா - இசை

அன்புக் குற்றவரே
அறநெறி கொற்றவரே
பண்பு பெற்றவரே
பார்புக ழுற்றவரே (அ

அடிமை யென்னும் விலங்கறுப்போர் மரபில் வந்தவரே
ஆழ்ந்து எதையும் சிந்தனை செய்யும் மதி யுகந்தவரே
வடிவிற் சிறிது பெரிதென்றாலும் எடை நிறுப்பவரே
வன்மை யெல்லாம் பறக்கவிட்டு விண் புகுந்தவரே

இரும்பைப்போன்ற கடின உள்ளம் படைத்த மூதலைகள்
இடுக்கில் சிக்கி தவிப்பதா நம் ஏழை உழவர்கள்
விரும்பும் தொழிலாளர் நலனைக் கெடுக்கும் கொடுமைகள்
விலக்க எண்ணி வீர கங்கணம் கட்டி உழைத்தீர்கள்

இதயம் கெட்டு இறந்துபட்டீர் எங்களுக்காகவே
இதற்காக நன்றி நாளும் செய்வோம் உங்களுக்காகவே
நிதநிதம் பிறப்பார் இறப்பார் புதிது மல்லவே
நீங்காத அன்பு காங்கிரஸ் தொண்டரானதோர் உருவே
அன்பு.

தென்றல் வந்து வீசாதோ - இசை

ஒன்றுபட்டு வாழாதோ
உண்மைகளை உணராதோ
ஓர் வயிற்றுச் சோதரர்போல்
சேருங்கிலை கூடாதோ
சிந்தனையும் தெளியாதோ [ஒ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாதிமத வாதத்திலே
தங்கள் தங்கள் நலனதிலே
பிரீதிகொள்ளும் பெருமையெல்லாம்
போக்கிவாழும் கருத்தினிலே [ஒ

தில்லுமுல்லே கிலைநாட்டி
சற்குணத்தைப் பாடைகட்டி
சல்லைபல கொடிய செயல்
தலைவிரித்தும் ஆடுவதோ [ஒ

எதிரிதணல் போல் எரிக்கும்
இன்பமொழி அதை அணைக்கும்
சதியதெல்லாம் தான் பறக்கும்
சரி சமமாய் மகிழ்ந்திருக்கும்
தன்மையைத் தேடும்
சமூக அன்பை நாடும்
நன்மைதரும் மார்க்கமதில் நடந்துவரத் தடைபடுமோ [ஒ

பாட்டாலே கூத்தாலே
படப்பிடிப்பின் நடிப்பாலே
பார்த்ததுவும் கேட்டதுவும்
பலவிதத்தால் அறிந்ததுவும்
கூட்டாக கூடிடவும்
குலப்பெருமை காத்திடவும்
நாடிவந்தே ஓடிவந்தே
நாட்டின்நிலை தனையுணர்ந்தே [ஒன்று

## கா. சி. ரெங்கநாதன் இயற்றியவைகள்.

1 வீரத் தமிழ்முரசு
2 நவமணி திறவுகோல்
3 எது வீர முழக்கம்?
4 தொழிலாளி பேசுகிறான்
5 சமரச முரசு
6 மணிமுரசு கும்மி
7 எது தேவை?
8 வ. இ. சத்தியாக்கிரகம்
9 மாரியம்மன் மகத்துவம்
10 மதன் இரதி மலர்வாளி
11 கந்தலீலை
12 நவநாதர் மகிமை
13 அரோகரா மணிமாலை
14 தெய்வானை வள்ளி ஏசல்
15 பத்ரகாளி பக்தி பதம்
16 (சிங்களத்தில்) கந்தலீலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு இராஜலிங்கம் உதயக் குறிப்பு.

சௌமிய, ஸ்ரீ 1909 டிசம்பர் மாதம் 3ம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு காவிமுத்து ஷ தம்பதிகளின் அருந்தவப் புதல்வஞக (கலகா பகுதி) வம்புருகாமம் கடுக்கணக்கில் பிறந்து சங்குவாரியில் வளர்ந்து, "சங்கவாரி"யாகவே திகழ்ந்து தக்க புகழீட்டி, 11-2-63 காலை 7 மணிக்கு மரணமடைந்து
13-2-63 மாலை 5 மணியளவில் சமாதியடைந்தவர்
(குறள், ஒளி)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

என்பதற்கேற்ப, 'இராஜலிங்கம்' அடக்கத்துக்குரியவர் மட்டுமின்றி, அவர் வளர்ந்த இடத்துக்குத்தக்க இயற்பெயருக்கும் பொருந்த இடம் பெற்றுக்கொண்ட அவரின் ஆத்மா சாந்தியுற்ருேங்குக!

சங்கு,—சனக், கூட்டம்.—வாரி—கடல்

| | |
|---|---|
| பிறப்பு— | 3-12-1909 |
| இறப்பு— | 11- 2-1963 |
| இருப்பு வயது— | 54 |

ஹலோ......................................யார் பேசுகிறது?

# தொழிலாளி பேசுகிருன்.

**சாஞ்சா சாயிறபக்கமே - என்ற - இசை**

போங்க என்னங்க நீங்க இப்படியேதான் போவிங்களா-ஒரே
பாதை சேர்ந்து போகநெனைக்க மாட்டிங்களா—போ
நாடு-நல்லா இருக்கிற காலத்திலே எல்லாம்
ஞாயமா ஒண்ணு இருந்து விட்டு — இப்ப
நாடே கொழும்பிக் கெடக்கயிலே வந்து
நாலு மூணுப்பிச்சு விட்டுகிட்டு— [போ]

இப்படிச் செய்யுவோம் இந்தச் சங்கத்திலே
அப்படிச் செய்யுவான் அந்தச் சங்கத்திலே
இப்படியே ஒண்ணுக்கொண்ணு எதிர்த்திது
என்னென்ன உருவத்தில் நிக்குறாருங்க— [போ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்திலும் போட்டி—மாகாண—கூட்டத்திலும் போட்டி
தோட்டத்திலும் போட்டி கூட்டத்திலும் போட்டி
தொட்டதுக்கும் போட்டி வச்சதுக்கும் போட்டி
சும்மா போனுக்கூட வலுச்சண்டையிடும் போட்டி
தொட்டோட வருதுங்க இந்தப் போட்டா போட்டி [போ]

பெரட்டும் உருட்டும் பண்ணிட்டு பணத்துக்கு
பலமாதிரி சிலவழிவைக் காட்டுறீங்க—இந்த
பணமெங்கே போச்சுன்னு பஞ்சாயத்தையும் மீறிட்டு
பல்டி அடிக்கவே பார்க்கிறிங்க—பின்பு
பிரிவினையே செய்துவச்சு முடிச்சுறீங்க— [போ]

பிரிவினையில் உண்டான அடிதடியும் படுகொலையும்
பார்க்காமலா இதுவரைக்கும் இருந்திருப்பீங்க — இப்ப
மறுபடியும் வேதாளம் முருங்கமரம் கதைபோல
மாட்டிக்கிட்டா கிடக்கிறது அறிந்து பாருங்க— [போ]

இன்னைக்கொருசங்கம் நாளைக்கொரு சங்கம்
ஏத்தம் போட்டு கிட்டுப் போகுதுங்க
இந்தச் சங்கங்களில் எந்தச் சங்கத்தைத்தான்
ஏற்பது நீங்களேதான் சொல்லுங்க— [போ]

ங்கப்பனும் ங்கக்காளும் அந்தச் சங்கத்திலே
கச்சிகட்டிகிட்டு நிக்கிறுங்க—தம்பி
சுப்பனும் நானும் ஒங்க சங்கமாம் அதுக்கு
சோத்தை வேறயா வைக்க நேந்துச்சுங்க— [போ]

அப்பன் ஒருசங்கம் பிள்ளை ஒருசங்கம்
அருமையாகவந்த பெண்டாட்டி ஒருசங்கம்
எப்படி எப்படிச் செய்யுது பாருங்க
இதுஎல்லாம் எதனுலுண்டாகுது கூறுங்க— [போ]

நல்லா இருந்த குடும்பங்களும் இப்ப
நாலாறு பாதையாப் போச்சுதுங்க—இந்த
குல்லாப்போடுற சங்கம் தில்லாப்பாடுற சங்கம்
எல்லா எழவும் வந்து என்னுச்சு பாருங்க— [போ]

இங்கிட்டொண்ணைக் கேட்டாக்கா
அங்கிட்டொண்ணு எதுக்குது
அங்கிட்டொண்ணைக் கேட்டாக்கா
இங்கிட்டொண்ணு மொறைக்குது
இப்படியேதான் எப்போதும் போனுங்க
எப்படித்தான் இதை சொல்லணும் சொல்லுங்க— [போ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னத்துக்குத்தான் இந்த எழவுசங்கமென்று
இன்னொருசங்கத்தை தேடுதுங்க—அட
இதுக்குமேலே அந்த எடுபட்டசங்கத்தில்
இதைவிட ரொம்பவும் மோசமுங்க— (போ)

ஒங்க சொத்து இது ஒங்க சங்கமென்று
ஓங்காரமாகத்தான் சொல்லுறிங்க—இதுலே
ஒருத்த எதும் கொஞ்சம் ஒசந்து போனப்போதும்
ஒடனே மட்டந்தட்டப் பார்க்கிறிங்க—இந்த
உண்மை உங்கமனசுக்கே தெரியுங்க— (போ)

பெரியமனுசரே எப்போதுமே இந்த
போட்டியை விடமாட்டோ மென்கிறிங்க
பேசவும் தெரியாத பாட்டாளியை ரப்பர்
பந்துகளைப்போலே எத்துறிங்க— [போ]

ஏழைக்குத்தொண்டு செய்றதாக இருந்தா
எவராச்சிம் ஒத்துப்போயித் தொலேங்க—இந்த
எல்லாமே நீங்களே பண்ணிக்கிட்டு சும்ம
ஏழையைப்போட்டு ஏங்கொடையிறிங்க— [போ]

ஓட்டுக்குன்னு நாட்டுக்குச் சேவை செய்தாரு
காந்தி புத்தர் செய்தாரு
ஏசு நபி செய்தாரு—இதுலே
உங்களுக்குமட்டும் ஏங்க இத்தனே தகராறு— [போ]

உள்ளபடி சேவை செய்யிறமனுசன்
ஓட்டுப்பிச்சை கேட்க மாட்டாரு—எதும்
கள்ளத்தனமாக செய்றது பாருங்க
என்றைக்குமே அது புகாரு— (போ)

மொதலாளியிடம் இந்த சலுகையெல்லாம் கேட்டு
மல்லுகட்டுங்கென்று சொல்லுறிங்க—அவன்
மாட்டேனென்று சொல்லுக்கோட்டுக்கு இழுத்து
பார்க்கிறேன் ஒருகை என்கிறிங்க — அந்த

மொதலாளிமேலொரு குற்றமில்லேங்கந்த
மகராஜன் ஒருநல்ல மனுசனுங்க—அவர்க்கு
முன்னேடிகள் கங்காணிகள் பந்தந்தாங்க - அவரை
மாறுட்டம் செய்யவே சொல்லுதுங்க— (போ)

முதலாளியும் ஒருபக்கம் இருக்கட்டும்—அவர்க்கு
முன்னேடியும் மறுபக்கம் கிடக்கட்டும்—இந்த
தொழிலாளி எல்லாம் ஒரேசங்க மாகட்டும்—அப்ப
சங்கத்துக்கும் மதிப்பிருக்கும் ஜனங்களுக்கும்
சுகம்கிடைக்கும் (போ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களே!

எங்களிடம்

**திறம் கொச்சிக்காய்த் தூள், மசாலைத் தூள்**

சில்லறையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.

தங்களுக்கு வேண்டிய அரைவைகளை கொடுத்தால்
திறம்பட அரைத்துக் கொடுக்கப்படும்.

## ராஜா கிரைண்டிங் மில்ஸ்,

**நிர். 43, பட்டிகாமம் ரோடு, கலகா.**

அன்பர்களே!

உங்கள் இல்லத்திற்கு ஏற்ற அழகுதரும்
**அலுமேனியம், பித்தளை வெங்கலப்பாத்திர சைசுகளும், இந்தியா கைத்தரி சேலை, பிடவைத் தினுசுகளும், இங்கிலீஸ் மருந்து வகைகளும்**
சகாயமான விலையில் கிடைக்கும்.

## S. K. மூர்த்தி ஸ்டோர்ஸ்,

**நிர். 19, உப்புராசி ரோடு : : கலகா.**

**சுவைமிக்க**

## சாப்பாடு அன் டீ, ஓட்டல்!

**கலகா நகருக்கு வரும் அன்பர்கள்**
**கீழ்க்காணும் விலாசத்திற்கு விஜயம்செய்யுங்கள்.**

## சிதம்பரம் ரெட்டியார்,

**நிர். 311, மெயின் வீதி : - : கலகா.**

**ராஜேந்திர பிரஸாத் - பாட்டில்**

| வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 5 | இருக்: அறிக்கது | எண்ணங்கொண்ட பேயது |
| 6 | இன்: எதிர்க்குது | இன்னும் பாய வருகுது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த ரகம்! நிறைந்த குணம்!!
## மலிந்த மணம்!!!

புகைப்போருக்கு புகழ்! புகழ்ந்துரைத்திடும் தமிழ்!
ஈடில்லா எழில்!



இயங்குது பீடி நூலில்
இவை எதில்?

எங்கள் சொந்த தயாரிப்பில் கை-
தேர்ந்த தொழிலாளர்களின் கைத்
திறமையோடு
உயர்ந்தரக அக்கூல் புகையிலையால்
தயாரிக்கப்பட்ட

# ஸ்பெஷல் "சபாரத்தின பீடி"

எல்லாத பீடி புகைக்கும் அன்பர்கட்கு திருப்தியூட்டுகிறது.

எவ்வன்றும், நமது இலங்கையின் பல பாகங்களின் தேவைக்குகந்தவாறு சப்ளை செய்வதுடன், கூலி தொழிலாளர் சுமார் 2000 வரை எமது பீடி பாக்டரியில் சேவை செய்கின்றனர். இதுவே எமது பீடியின் உன்னத திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மிக்க பிரபல்யமாக பீடி புகைக்கும் அன்பர்கள் நிறைந்த கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருமலை, மன்னார், பதுளை முதல் ஏன்? இலங்கைத் தீவு பூராவும் விரும்புவது.

ஸ்பெஷல் சபாரத்தின பீடி
என்பதை அன்பர்கள் அறிந்ததே




மொத்தமாகவும், சில்லறையாகவும்
வியாபாரிகள் பெற்றுக்கொள்ளலாம்.

எங்கும் கிடைக்கும்.

எங்கள் டிரேட் மார்க் ஸ்பெஷல்
சபாரத்தின பீடியை கேட்டு வாங்குங்கள்.

இலங்கையில் ஏக விநியோகஸ்தரும் உரிமையாளரும்

## கே. என். சுப்ரமணியம் அன் சன்,

ஸ்பெஷல் அன் சபாரத்தின பீடி தயாரிப்பாளர்.

கம்பளை. போன்:- 325

ராஜா அச்சகம் 5000—7-3-63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org